


**GDN வலைத்தள தகவல்கள்: எண்: 13**
GDN உறுப்பினர்களுக்கு புதிய தகவல்கள் (03 ஜுலை - 06 ஆகஸ்ட், 2008)

1) கென்யா, அமெரிக்கா, ஜெர்மனி, சூடான், பங்களா தேசம் முதலிய நாடுகளிலிருந்து புதிதாக சேர்ந்த நமது புது உறுப்பினர்களை வரவேற்கின்றோம்!

2) **பாலின பாகுப்பாடு - சீதோஷ்ண மாறுப்பாடு தகவல் வழிகாட்டு அட்டவணை.** நடைமுறையளவில் மெக்சிகோ நாட்டில் UNDP ஆதரவில் நடைபெற்ற திட்டதிற்கு இந்த சீதோஷ்ண மாறுப்பாட்டை தழுவிய பாலின பாகுப்பாட்டு அட்டவணை உதவியது. (முழுத்தகவல்கள் ஸ்பானிய மொழியில்)
http://www.gdnonline.org/resources/UNDP_Mexico_Guia_Recursos_Genero_CC.pdf

3) **அபாய குறைப்பு- பாரபட்சமில்லாமை. அழிவு நேரங்களில் பாலின தேவை அடிப்படையிலான நிர்வாகம்.** இந்த கட்டுரையின் நோக்கம் அழிவு நேரங்களில் பாரபட்சமில்லாமை, பாலின தேவை அடிப்படையிலான நிர்வாக வழிமுறைகள் முதலியவற்றை ஆராய்கின்றது. (முழுத்தகவல்கள் ஸ்பானிய மொழியில்)
http://www.gdnonline.org/resources/UNDP_GestiondeRiesgo_Part1.pdf<P>
http://www. gdnonline.org/resources/UNDP_GestopmdeRoesgp_Part2.pdf

4) **காத்தரினா சூராவளி காற்று: தனி தாய்மார் இடம் பெயர்தல், சாதன சேகரித்தல், கீழ் நோக்கிய இடப்பெயற்ச்சி.** இந்த கட்டுரை காத்தரினா சூராவளி காற்றுக்கு பின் கொலராடோ மானிலத்திற்க்கு குடிபெயர்ந்த தனி தாய்மார்களின் அனுபவங்களை, அவர்கள் தேவைகளை விவரிக்கின்றது. ஜெனிபர் டொபின்-குர்லே மாஸ்டர் நீண்ட கட்டுரை, சமுதாய பிரிவு, கொலராடோ மானில பல்கலைகழகம். மேலும் விபரங்களுக்கு, தயவுசெய்து கட்டுரை ஆசிரியரை அணுகவும்: jtobin@sima.colostate.edu

5) **புது ஈராக் ... ஒடுக்கபட்ட பெண்கள்:** ஈராக்கு நாட்டில் பெண்களுக்கு எதிராக பெருகிவரும் வன்முறைகளுக்கு, கடத்தல்களுக்கு, கற்பளிப்புகளுக்கு, கொலைகளுக்கு எதிராக அம்னெஸ்டி இன்டெர்னாடியனல் அபாய சங்கு ஊதுகின்றது. ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான, பாஸ்ரா நகரத்தில் கடந்த ஆண்டு 133 பெண்கள் --- இஸ்லாமிய சட்டத்தை மீரியதாக 79 பெண்கள், குடும்ப கௌரவத்லை காக்க 47 பெண்கள் கொல்லப்பட்டதாக UN சங்கத்தின் மக்கள் உறவு அமைப்பு வெளியீடு தெரிவிக்கின்றது. 2006/2007ல் உலக சுகாதார அமைப்பு (WHO) நடத்திய ஒரு சர்வேயின் அடிப்படையில், 21.2 சதவீத பெண்கள் சரீர சம்பந்தமான வன் முறைகளுக்கு ஆளானதாக தெரிகின்றது. முழுக்கட்டுரை படிக்க GPF வலைத் தளத்தை அணுகவும்:
http://www.globalpolicy.org/security/issues/iraq/attack/consequences/2008/0727oppressed.htm

6) **பங்களாதேஷ் நாட்டு கிராமிய பெண்களுக்கு பாலின பாகுப்பாட்டு விழிப்புணர்வு.** பங்களாதேஷ் நாட்டு கிராமிய பெண்களின் பாகுப்பாட்டை உருவாக்கும் காரணி யார்? எந்த அளவு "பாலின அடிப்படையை" பற்றிய விளிப்புணர்வு அவர்களுக்கு உள்ளது? பங்களாதேஷ்

நாட்டு மூன்று கிராமங்களிலிருந்து தெரிந்தெடுத்த 156 கிராமிய பெண்களை கொண்டு நடத்திய இந்த ஆராய்ச்சி இவற்றிற்கான விடைகளை தருகின்றது. பர்வீன், எஸ். ஜெர்ணல் ஆப் இண்டர்நேட்டியனல் வுமன் ஸ்டடிஸ், 2007. ப்ரிட்ஜ்வாட்டர் ஸ்டேட் காலேஜ். முழு கட்டுரை சேகரிக்க: http://www/bridgew.edu/SoAS/jiws/Nov07Bangladesh.pdf (ResourceNet, AWID and Siyanda)

7) **பதிப்பாசிரியர் குறிப்பு: முரண்பாடு, ஆபத்தான சூழ்நிலைகளில் இனவிருத்தி - பாலியல் சம்பந்தமான உரிமைகள்.** அழிவு சூழ்நிலைகள், இயல்பாகவோ அல்லது மனித முரண்பாடுகளால் எற்பட்டதாக இருப்பினும், அவை பாலியல் பாகுபாட்டு அடிப்படையில், வயது, சமுதாயம், இன பிரிவினை அடிப்படையில் பாதிப்பு ஏற்படுத்துவது வியப்புக்குள்ளாகின்றது. இதன் அடிப்படையில் பல ஆராய்ச்சியாளர்கள், நிறுவனங்கள் அழிவு சூழ்நிலைகளில் ஏற்படும் பாலியல் பலாத்காரம், இனவிருத்தி சுகாதாரம், மற்றும் பல வண்முறைகளை பல பாலியல் பாகுபாட்டு பரிமாணத்தில் ஆராய்கின்றது. ரோஸலிண்ட் பி பெட்செஸ்கி, ரிப்ரொடக்டிவ் ஹெல்த் மெட்டர்ஸ் 2008; 16(31):49. இந்த பதிப்பாசிரியர் குறிப்பை கீழ்கண்ட GDN வலைத்தளத்திலுருந்து பெறவும்: http://www.gdnonline.org/resources/RHM31_Editorial_Conflict_Crisis_Settings.pdf, மேலும் இவ்வித தகவல்களுக்கு எல்ஸ்வியெரின் பெண்கள் சுகாதார பிரிவு வலைதளத்தை அணுகவும்: http://www.elsvier.com/wps/find/H03_685.cws_home/main

8) **மனித உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அழிக்கும் நுண்ணணுக்கள்/எய்ட்ஸ் நோய். தென் ஆப்பிரிக்க நாட்டின் பெண்களும் மனித இடம் பெயரலும்.** இயல்பாகவே இந்நோய் பரவ ஆண்களை விட பெண்களே அதிக அளவு ஆபத்தான சூழ்நிலைகளில் உள்ளனர். மேலும், பாலின பாகுப்பாட்டின் விளைவு, இந்நோய் பற்றிய விபரங்கள் அறிய இயலாமை, சிகிர்ச்சை பெற இயலாமை, பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க இயலாமை, இவர்கள் நிலமையை மேலும் கீழ்படுத்துகின்றது. இவற்றுடன் பாலின பாகுபாட்டால் ஏற்படும் வன்முறை, பாலியல் பலாத்காரம், கடத்தல், கட்டாய திருமணம், விபசாரம், பலாத்காரம் முதலியவை மேலும் கேடு விளைவிக்கின்றது. உலக ஐக்கிய மாநாட்டின் INSTRAW வலைத்தளத்தில் முழுக்கட்டுரையையும் பெறலாம்: http://www.un-instraw.org/en/media-center/e-news/hiv-aids-women-and-migration-in-southern-africa-2.html

9) **வானொலி: அவள் பேசினாள்.. அவள் கேட்டாள் (பிரன்ச்சு மொழியில்):** மனிதநேய இடைபட்ட செய்தி குழுவின் தகவல் துறையினரால் இந்த வானொலி நிகழ்ச்சி, சூடான் நாட்டில் வசிக்கும், சாட், சூடான் நாட்டு அகதிகளுக்காக தயாரிக்கப் பட்டது. பொதுவாக டாபூர் நகரத்தில் நிகழ்ந்த படுகொலைகளிலிருந்து தப்பித்த; அந்த அகோரங்களை கண்டு அதனால் பாதிக்கப் பட்ட பெண் அகதிக்களுக்காக இந்த 'அவள் பேசினாள்.. அவள் கேட்டாள்' என்ற பிரன்ச்சு நிகழ்சி தயாரிக்கப்பட்டது. (The drum beat issue 453, The communication Initiative) http://www.comminit.com/en/node/134390/376

10) **இணைப்பு: அழிவுக்குப் பின் வீடுகளில் வேதனை.** ரெபெக்கா க்ரீன், இன்ஸ்டிட்யூட் பார் க்லொபல் அண்ட் கம்யூனிட்டி ரிசிலியென்ஸ். http://iqcr.blogspot.com/2008/07/post-disaster-housing-woes.html.

* பல முக்கியமான செய்திகள், சம்பவங்கள், அறிவுப்புகள், பிம்பங்கள் முதலியவற்றை தொகுத்து GDN வலைத்தளம் உங்களுக்கு அளிக்கின்றது. GDN வலைதளத்தில் தோன்றும் கட்டுரைகள GDN குழுத்தலைமையோ அல்லது அதன் உறுப்பினரின் தனிப்பட்ட கருத்துக்களின் பிரதிப்பலிப்போ அல்ல. இவ்வலைத் தளத்தில் தோன்ற விரும்பும் உங்கள் கருத்துக்கள், கட்டுரைகள் முதலியவற்றை gdn@gdnonline.org விலாசத்திற்கு அனுப்பவும். இவ்வலைத் தளத்தில் உறுப்பினராக கீழ்கண்ட வலைத்தளத்தில் பதிவு செய்யவும். http://www.gdnonline.org/register.php